

# அனுதின

## சக்தி



THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## *To the Readers*

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## *To the Copyright Owners*

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## *About Word of God Ministries*

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

# அனுதின சக்தி

தேவவசனத்தினால் உண்டாகும்...
ஆறுதலினாலும் நாம்
நம்பிக்கையுள்ளவர்
களாகும்படிக்கு.. ரோமர் 15:4

**Scripture Gift Mission**
PO Box 5316, 18/1 Infantry Road, Bangalore 560 001

இந்த புத்தகத்திலுள்ள வார்த்தைகள் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டவைகள். நீங்கள் இந்த புத்தகத்தை வாசிக்கும்போது தேவையான பெலத்தையும் இன்னும் அதிகமாக வேதத்தை வாசிக்கும்படியான உற்சாகத்தையும் பெற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

*இயேசு கிறிஸ்து கூறுகிறார் :*
"உங்கள் இருதயம்
கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில்
விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும்
விசுவாசமாயிருங்கள். சமாதானத்தை
உங்களுக்கு வைத்துப் போகிறேன்,
என்னுடைய சமாதானத்தையே
உங்களுக்குக், கொடுக்கிறேன்; உலகம்
கொடுக்கிறபிரகாரம் நான்
உங்களுக்குக் கொடுக்கிறதில்லை.
உங்கள் இருதயம் கலங்காமலும்
பயப்படாமலும் இருப்பதாக."
யோவான் 14:1,27

வருத்தப்பட்டுப்
பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள்
எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்.
நான் உங்களுக்கு இளைப்பாறுதல்
தருவேன். மத்தேயு 11:28

**என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர்.** *சங்கீதம் 104:1*

தேவன் கூறுகிறார்: "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்." எரேமியா 31:3

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். ரோமர் 5:8

தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்: குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடயை குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.
1 யோவான் 5:11,12

*என்னை ஆதரித்தருளும்; அப்பொழுது நான் இரட்சிக்கப்பட்டு...   சங்கதம் 119:117*

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.
சங்கீதம் 46:1

அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்;   உபாகமம் 33:27

*தேவன் கூறுகிறார்* : "நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்."   ஏசாயா 41:10

*என்னை விட்டுத் தூரமாகாதேயும்;*
*ஆபத்து கிட்டியிருக்கிறது.* *சங்கீதம் 22:11*

*தேவன் கூறுகிறார் :*
"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்."
சங்கீதம் 50:15

கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார். சங்கீதம் 55:22

தீங்கு நாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.
சங்கீதம் 27:5

*தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்.* *லூக்கா 15:21*

கர்த்தர் உருக்கமும் இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். சங்கீதம் 103:8

*தேவன் கூறுகிறார் :* "நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களை விட்டு நீங்கிற்று." ஓசியா 14:4

ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். சங்கீதம் 86:5

*நானோ . . . எளிமையுமானவன்; தேவனே, என்னிடத்தில் தீவிரமாய் வாரும். சங்கீதம் 70:5*

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலிப்பியர் 4:19

தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லா வற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? ரோமர் 8:32

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு. சாங்கீதம் 37:5

## *என்னை நெகிழவிடாமலும் என்னை கைவிடாமலும் இரும். சங்கீதம் 27:9*

கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமு முள்ளவராயிருக்கிறாரே.
யாக்கோபு 5:11

உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறு உத்தரவு அருளுவார். ஏசாயா 30:19

கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும் உள்ளவர். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். சங்கீதம் 145:8,18

*நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும். சங்கீதம் 143:8*



கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்.
ஏசாயா 58:11

கர்த்தர் தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை. உபாகமம் 31:8

இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நடத்துவார்.
சங்கீதம் 48:14

## கர்த்தராகிய இயேசுவே, வாரும்.
வெளி 22:20

இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார். அப். 1:11

அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். 1 யோவான் 3:2

நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். கொலோசேயர் 3:4

*கர்த்தாவே... நீர் எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும். சங்கீதம் 31:1,2*

கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார். ஏசாயா 26:4

தேவன் கூறுகிறார் : "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலன் பூரணமாய் விளங்கும்."
2 கொரி. 12:9

இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.
எபிரேயர் 13:8

*விசுவாசிக்கிறேன், என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும். மாற்கு 9:24*

இயேசு கூறுகிறார் : உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். யோவான் 14:4

மரணமானாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங் களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். ரோமர் 8:38,39

***என் இளவயதின் பாவங்களை நினையாதிரும். சங்கீதம் 25:7***

கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன். ஏசாயா 43:1

நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன். ஏசாயா 43:25

நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். ஏசாயா 41:10

**என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து...** *சங்கீதம் 31:10*

நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்.
சங்கீதம் 34:18

பலங்கொண்டு திடமனதாயிரு, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். யோசுவா 1:9

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. புலம்பல் 3:22-23

*என் கர்த்தாவே... என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டருளும்.* *சங்கீதம் 28:1,2*

*இயேசு சொன்னார் :* “மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.” யோவான் 16:23

“நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள்.” மத்தேயு 21:22

“கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிற-வனுக்குத் திறக்கப்படும்.” லூக்கா 11:10

***கர்த்தாவே, எழுந்தருளும்
என்னை இரட்சியும்.*** *சங்கீதம் 3:7*

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கும்படி தேவன் தம்முடைய
குமாரனை உலகத்தில் அனுப்பாமல்,
அவராலே உலகம்
இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை
அனுப்பினார். யோவான் 3:17

கர்த்தருடைய நாமத்தைத்
தொழுதுகொள்ளுகிற எவனும்
இரட்சிக்கப்படுவான். ரோமர் 10:13

கர்த்தரிடத்தில் கிருபையும்,
அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.
சங்கீதம் 130:7

எங்கள் பிதாவே ... தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். மத்தேயு 6:9,13

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்;
உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்
படுகிறதற்கு அவர் இடங் கொடாமல்,
சோதனையைத் தாங்கத்தக்கதாக,
சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்
கொள்ளும்படியான போக்கையும்
உண்டாக்குவார். 1 கொரிந்தியர் 10:13

கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை
சோதனையினின்று இரட்சிக்க
அறிந்திருக்கிறார். 2 பேதுரு 2:9

நான் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர்
என்னோடே கூட இருக்கிறீர். சங்கீதம் 23:4

## தேவனே ... என் பாவமற என்னைச் சுத்திகரியும். *சங்கீதம் 51:1,2*

"வழக்காடுவோம் வாருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். "உங்கள் பாவங்கள் சிவேரென்- றிருந்தாலும், உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்."
ஏசாயா 1:18

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்- களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்.
ஏசாயா 53:5

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னிக்க இயேசு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.
1 யோவான் 1:9

ஆண்டவரே நீர்... தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன். *யோவான் 11:27*

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

யோவான் 3:16-17

## தேவனே... உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாதிரும். *சங்கீதம் 51:10-11*

*இயேசு சொன்னார் :* "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." மத்தேயு 11:28

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." யோவான் 6:37

"ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்."
யோவான் 6:35

*தேவனே... என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். சங்கீதம் 51:1*

*தேவன் கூறுகிறார் :* "உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றிவிட்டேன். என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்." ஏசாயா 44:22

அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும் நம்முடைய அக்கிரமங்-களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். சங்கீதம் 103:10-12

*காணாமற்போன ஆட்டைப்போல வழிதப்பினேன். உமது அடியேனைத் தேடுவீராக. சங்கீதம் 119:176*

20

கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப்
பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினி-
மித்தம் ஒருதரம் பாடுபட்டார். 1 பேதுரு 3:18

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்.
எபேசியர் 2:13

கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. ரோமர் 8:1

*தேவனே... உம்முடைய செட்டைகளின் நிழலிலே காப்பாற்றும். சங்கீதம் 17:9*

அவர் உங்களை விசாரிக்கிறவறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். 1 பேதுரு 5:7

*தேவன் சொன்னார் :* "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை." எபிரேயர் 13:5

கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக் கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது, நான் சகாயம் பெற்றேன். சங்கீதம் 28:7

21

**தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன். *சங்கீதம் 16:1***

கர்த்தர் உன்னைக் காக்கிறவர். கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார். அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார். சங்கீதம் 121:5,7-8

உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதை- யுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர். ஏசாயா 26:3

*தேவனே.. என்னைக் கழுவியருளும், உறைந்த மழையிலும் நான் வெண்மையாவேன். சங்கீதம் 51:7*

அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். 1 யோவான் 1:7

இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. எபேசியர் 1:7

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப்போஸ்தலர் 4:1

**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்.** *சங்கீதம் 51:10*

24

இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!
யோவான் 1:29

*இயேசு சொன்னார் :* "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." யோவான் 6:47

இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள்.
2 கொரிந்தியர் 6:2

**ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும்.** *மத்தேயு 15:25*

உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து, பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன். ஏசாயா 41:13

நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். உன் தேவனாயிருக்கிற கர்த்தர் நானே. ஏசாயா 51:12,15

*இயேசு சொன்னார் :* "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்." யோவான் 14:18

## தேவனே... உமது வல்லமையை உமது அடியானுக்கு அருளும். *சங்கீதம் 86:14,16*

நீர் ஏழைக்குப் பெலனும்,
நெருக்கப்படுகிற எளியவனுக்குத்
திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும்
அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும்
நிழலுமானீர். ஏசாயா 25:4

சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர்
அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற
காலங்களில் அவரே தஞ்சமானவர்.
ஏசாயா 9:9

கர்த்தருடைய கிருபை அவருக்குப்
பயந்தவர்கள் மேல் அநாதியாய்
என்றென்றைக்கும் உள்ளது.
சங்கீதம் 103:17

**தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும்.** *சங்கீதம் 55:1*

27

நாம் எதையாகிலும் அவர் சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார்.
1 யோவான் 5:14

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம். எபிரேயர் 4:16

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.
பிலிப்பியர் 4:6

**கர்த்தாவே... உமது கிருபையினாலே என்னை இரட்சியும். சங்கீதம் 31:14,16**

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார். லூக்கா 19:10

கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு... அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். 1 பேதுரு 2:21,24

மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் பாவமன்னிப்பைப் பெறுவான். அப்போஸ்தலர் 10:40,43

**தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். *லூக்கா 18:13***

இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. ஏசாயா 59:1

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு, உலகத்தில் வந்தார். 1 தீமோத்தேயு 1:15

தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். எபிரேயர் 7:25

## *ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.* *சங்கீதம் 16:11*

*இயேசு சொன்னார் :* "நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான். என் ஆடுகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது, நான் அவைகளுக்கு நித்தயஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை."
யோவான் 10:11,27,28

"நான் பிழைக்கிறபடியினால், நீங்களும் பிழைப்பீர்கள்." யோவான் 14:19

*ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும். லூக்கா 23:42*

தேவனோ இரக்கத்தில் ஐசுவரிய-
முள்ளவராய் . . . அக்கிரமங்களில்
மரித்தவர்களாயிருந்த நம்மைக்
கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்;
கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்.
கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை
அவரோடே கூட எழுப்பி,
உன்னதங்களிலே அவரோடே கூட
உட்காரவும் செய்தார். எபேசியர் 2:4-5,7

தேவனே என் இரட்சிப்பு; நான்
பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்.
ஏசாயா 12:2

## *சங்கீதம் 23*

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.

அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்.

## சங்கீதம் 46

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.

ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும்,

அதின் ஜலங்கள் கொந்தளித்துப்பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம்.

ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும்.

தேவன் அதின் நடுவில் இருக்கிறார், அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார்.

ஜாதிகள் கொந்தளித்தது, ராஜ்யங்கள் தத்தளித்தது; அவர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினார்,பூமி உருகிப் போயிற்று.

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

பூமியிலே பாழ்க்கடிப்புகளை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்து பாருங்கள்.

அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓயப் பண்ணுக்கிறார்; வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்கிறார்; இரதங்களை நெருப்பினால் சுட்டெரிக்கிறார்.

நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.

## சங்கீதம் 121

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத் திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.

இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.

கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.

பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை.

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.

கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்.

# ஜெபம்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம்
பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும்
செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று
எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு
நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை
எங்களுக்கு மன்னியும்.

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,
தீமையனின்று எங்களை இரட்சித்துகொள்ளும்,
ராஜ்யமும், வல்லமையும், மகிமையும்
என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமேன்.
மத்தேயு 6:9-13

Bible©BSI

